மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.10/2012

2024–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தசரதன்(Dw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.30.09.2024</u>
<u>பி.வா.சா.1</u>
**<u>குறுக்கு விசாரணை:–</u>**

நான் இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி ஆவேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வாடகைக்கு வீடு பிடித்து கொடுத்து வருகிறேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்று எனக்கு தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 471/1A1A ஆகும். சர்வே எண்.471 என்பது ஆதியில் மொத்தம் 50 ஏக்கர் என்றால் சரிதான். சொத்து சுவக்கின் அந்தோணியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான் அதில் அவருக்கும், மற்ற பங்காளிகளுக்கும் பாத்தியம் உள்ளது. சுவக்கின் அந்தோணியம்மாள் கணவரின் பெயர் அந்தோணி சந்தியா என்றால் சரிதான். அந்த மற்ற பங்காளிகள் யார், யார் என்றால் அந்தோணிபிச்சை மற்ற நபர்கள் எனக்கு ஞாபகம் இல்லை. வாதி சுவக்கின் அந்தோணியம்மாளிடம் இருந்து 3 ஏக்கர் சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் கிழக்கு பக்கமாக வாங்கியுள்ளார். கிழக்கு பக்கமாக வாங்கியுள்ளார் என்று எதை வைத்து சொல்கிறேன் என்றால் எனக்கு கிரையம் கொடுத்த எத்தே பாதர் என்பவர் எனக்கு மேல்புறமாக கொடுத்துள்ளார். நான் தவறாக சொல்கிறேன் சுவக்கின் அந்தோணியம்மாள்தான் வாதிக்கு மேல்புறம் உள்ள சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 08.06.1984 தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் சுவக்கின் அந்தோணியம்மாள் வாதிக்கு கிரையம் கொடுக்கும்போது மேல்புறம் கண்ட சொத்து என்று தான் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 3 ஏக்கர் கிரையம் வாங்கிய வாதி வடபுறத்தில் எத்தே பாதருக்கு 1 ஏக்கர் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுக்கும்போது தென்புறமுள்ள 2 ஏக்கர் நிலத்தை தனது கைவசம் உள்ள இடம் என காட்டி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்றால் வின்செண்ட் மச்சாது, இருதயம் மச்சாது இருவரும் எத்தே பாதர் என்பவருக்கு பவர் கொடுத்து நானும், வாதியின் மச்சான் மரியவில்பர்ட் இருவரும் சேர்ந்து எத்தே பாதரிடம் இருந்து கிரையம் வாங்கினோம். எந்த தேதியில் வாங்கினோம் என்றால் 2008ம் ஆண்டு வாங்கினோம் தேதி ஞாபகம் இல்லை. நான் வாங்கிய கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான் பத்திரம் மரியவில்பர்ட் என்பவரிடம் இருக்கிறது. அந்த பத்திரத்தின் சான்றிட்ட நகலை பத்திர அலுவலகத்தில் இருந்து எடுக்க முடியும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள இதர கிரைய ஆவணங்களும் சார்பதிவாளர் கணினி சான்றிட்ட நகல் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய ஆவணத்தை பார்த்தால் அந்த ஆவணத்தை எழுதிக்கொடுத்த நபர்களுக்கு சொத்து எப்படி பாத்தியம் என்ற விபரம் சொல்லப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அது எங்களுக்கு பாதகமாக இருக்கும் என்பதால் தான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு எனது பெயரிலும்,மரிய வில்பர்ட் பெயரிலும் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் பட்டா ஏற்பட்டுள்ளது. அந்த பட்டாவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எத்தே பாதரிடம் இருந்து எவ்வளவு சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சர்வே எண்.471/1 A1A ல் 1 ஏக்கர் 1 செண்ட், சர்வே எண்.471/8B ல் 25 செண்ட் வாங்கினேன். நான் எழுதிக்கொடுத்துள்ள பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சாஆ.3 ஆவணங்களில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதைக் காட்டக்கூடிய பட்டாவை அந்த ஆவணங்களுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டாவை தாக்கல் செய்துதான் கிரையம் செய்யமுடியும். அவ்வாறு பட்டா தாக்கல் செய்யும்போது அந்த பட்டா கிரைய ஆவணத்தில் இணைக்கப்படும் என்றால் முன்பு இணைக்கவில்லை தற்போது இணைக்கிறார்கள். பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்பது எனக்கும், மரிய வில்பர்ட்டிக்கும் பவர் ஏஜெண்டாக சேசுராணி என்பவர் மார்சிலின் டிட்டோ என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் தங்கச்சிமடம் காட்டுமாரியம்மன் கோவில் தெற்கில் என்று போடப்பட்டுள்ளது என்றால் கிழமேல் பாதைக்கும் தெற்கு என்று போடப்பட்டுள்ளது. பட்டா எண்.1553, சர்வே எண்..471/1 A1A, 7 1/2 செண்டுக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணமானது எனது பவர் ஏஜெண்டாக செல்வராணி என்பவர் உமாபிரியா என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் என்றால் சரிதான். உமாபிரியா என்பவர் எனது மகள் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரம் 21 செண்டுக்கு எழுதப்பட்டது என்றால் சரிதான். இந்த இரண்டு கிரையபத்திரத்தில் உள்ள பட்டா எண்கள் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான் அது சம்பந்தமாக தாலுகா அலுவலகத்தில் தான்கேட்க வேண்டும்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.09.30 17:00:39 +0530